## <u>சுருக்கம்</u>

நகராட்சி / மாநகராட்சி பள்ளி மாணவர் கல்வி உதவித் திட்டம் –நகராட்சி மாநகராட்சி பள்ளிகளில் பத்தாவது மற்றும் +2 படிக்கும் மாணவ மாணவிகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் 25 இடங்களைப் பிடிக்கும் மாணவ மாணவியர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் உயர்படிப்பிற்கு உதவித் தொகை வழங்குவது – ஆணைகள் வெளியிடப்பட்டது – அரசாணைக்கு திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை

**அரசாணை(நிலை) எண்.234** **நாள்: 27.11.2008.**

**படிக்கப்பட்டது:**

1) அரசு ஆணை (நிலை) எண்.55, நநி(ம) குவ துறை, நாள் 31.3.2008.
2) அரசு ஆணை (நிலை) எண். 80, நநி(ம) குவ துறை, நாள் 16.5.2008.
3) நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம், ந.க.எண்.2943/2008/எம்.3, நாள் 23.9.2008

----

**ஆணை :**

அரசாணை (நிலை) எண்.55, நநி(ம)குவ துறை, நாள் 31.3.2008–ல் உள்ள பத்தி 6–க்கு கீழ்க்கண்ட திருத்தம் வெளியிடப்படுகிறது.

### <u>தற்பொழுது உள்ளது</u>

மேற்குறிப்பிட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. 2007–2008ல் மாநில அளவில், பத்து மற்றும், +2 இறுதித் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும், மாநகராட்சி / நகராட்சிப் பள்ளிகளில் பயிலும் முதல் 25 மாணவ / மாணவியர்களுக்கு பரிசுத் தொகை ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்கவும், அவர்களுள் பொருளாதார காரணங்களால் பட்டப்படிப்பை தொடர இயலாத மாணவ / மாணவியருக்கு அரசு கல்லூரிகளில் வசூலிக்கப்படும் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், உணவுக் கட்டணம் ஆகியவற்றை மட்டுமே உதவித் தொகையாக நிர்ணயம் செய்ய வேண்டும் ; மற்றும் அவ்வாறு உதவித் தொகை பெறும் மாணவ / மாணவியர் ஏதாவது ஒரு உதவித் தொகை (Scholarship) மட்டும் தான் பெற வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, உதவித் தொகை வழங்கவும் அரசு ஆணையிடுகிறது. மேலும் அரசிடம் ரூ.2.00 கோடி இணை மானியம் கோரும் நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை ஏற்று , அந்த ரூ.2.00 கோடியை கேளிக்கை வரி இழப்பீடு ஈட்டு நிதியத்திலிருந்து வழங்கியும் நகராட்சி நிர்வாக ஆணையர்

அலுவலகத்திலிருந்து பிரித்து வழங்கப்படவுள்ள 2007–08 ஆம் ஆண்டிற்கான மாநில நிதிக்குழு மானியத்தின் இறுதித் தவணையிலிருந்து ரூ.2.53 கோடியை மேலே பத்தி–3ல் குறிப்பிட்டுள்ளவாறு மாநகராட்சி / நகராட்சிகளின் சார்பாக பிடித்தம் செய்து " மாநகராட்சி/நகராட்சி பள்ளி மாணவர் கல்வி உதவி நிதி" (Corpus Fund)–க்கு உடனே மாற்றம் செய்திடவும், பின்னர் இத்தொகையை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தீர்மானத்தைப் பெற்று உள்ளாட்சி அமைப்புகளின் கல்வி நிதியிலிருந்து பொது நிதிக்கு மாற்றம் செய்திடவும் அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

<u>திருத்தப்பட்டது</u>

மேற்குறிப்பிட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. 2007–08ல் மாநில அளவில், பத்து மற்றும், +2 இறுதித் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும், மாநகராட்சி / நகராட்சிப் பள்ளிகளில் பயிலும் முதல் 25 மாணவ / மாணவியர்களுக்கு பரிசுத் தொகை ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்கவும், அவர்களுள் பொருளாதார காரணங்களால் பட்டப்படிப்பை தொடர இயலாத மாணவ / மாணவியருக்கு கீழ்க்காணும் வழிகாட்டி நெறிமுறைகளின்படி உதவித் தொகை வழங்கவும் அரசு ஆணையிடுகிறது.

i) இத்திட்டத்தில் தேர்வு பெறும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் எந்த ஒரு உயர் கல்விக்கு (ஆசிரியர் பயிற்சி, தொழில் நுட்பக் கல்வி, (பாலிடெக்னிக்) கல்விகள் உள்பட) விண்ணப்பித்து சேர்க்கை பெற்றிருந்தாலும், சாதாரணமாக உயர் கல்வி முடிக்கும் காலம் வரை (Normal duration of the Course), இந்த கல்வி உதவித் தொகை திட்டத்தில் மேற்படி மாணவருக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

ii) இத்திட்டத்தில் உயர்படிப்புக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணம், விடுதிக் கட்டணம் மற்றும் உணவுக் கட்டணம் அடங்கியதாகும்.

அரசுக் கல்லூரிகளுக்கும், சுயநிதிக் கல்லூரிகளுக்கும் அரசால் நிர்ணயிக்கப்படும் கல்விக் கட்டணங்கள் மற்றும் பிறக் கட்டணங்கள் (திருப்பித் தரும் வைப்புத் தொகை நீங்கலாக) மாணவர்களுக்கு வழங்கப்படும். மேலும் இக்கட்டணங்கள் அரசால் அவ்வப்பொழுது மாற்றம் செய்யப்படும் போதெல்லாம் மாணவர்களுக்கு அதன்படி வழங்கப்படும்.

கல்வி நிலையங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களால் அங்கீகரிக்கப்பட்ட பாடப்பிரிவுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் (திரும்ப வழங்கப்படும் வைப்புத் தொகைகள் தவிர்த்து) அரசு ஒதுக்கீடு இருக்கைகளுக்கு அரசு நிர்ணயித்த கல்விக் கட்டணம், தனியார் ஒதுக்கீடு இருக்கைக்கு ஒரு மாணவர் சேர்க்கை பெற்றால் அவருக்கு தனியார் ஒதுக்கீடு இருக்கைக்கு அரசு நிர்ணயித்த கல்வி கட்டணமும் வழங்கப்படும்.

மேலும் அரசு சார்பு பல்கலைக் கழகங்களால் நடத்தப்படும் கல்லூரிகளுக்கு மேற்படி பல்கலைக் கழகங்கள் நிர்ணயிக்கும் கல்விக் கட்டணங்கள், பிறக் கட்டணங்கள் (திருப்பித் தரும் வைப்புத் தொகை நீங்கலாக) முழுமையாக மாணவர்களுக்கு திரும்ப வழங்கப்படும்.

iii) இத்திட்டத்தில் பயன்பெறும் மாணவர்களுக்கு கீழ்க்கண்ட கட்டணங்கள் கல்விக் கட்டணமாக வழங்கப்படும்.

| | |
|---|---|
| i | சேர்க்கை / பதிவுக் கட்டணம் |
| ii | கல்வி கற்பிப்புக் கட்டணம் |
| iii | பரிசோதனைக் கூடக் கட்டணம் |
| iv | விளையாட்டுக் கட்டணம் |
| v | மாணவர் சங்கக் கட்டணம் |
| vi | நூலகக் கட்டணம் |
| vii | மருத்துவ பரிசோதனைக் கட்டணம் |

மேற்கண்ட கட்டணங்கள் தவிர கல்வி நிலையங்கள் / பல்கலைக் கழகத்தால் வசூலிக்கப்படும் பிற கட்டாய கட்டணங்களும் இதில் அடங்கும். பிணை வைப்புத் தொகை மற்றும் முன்னெச்சரிக்கை வைப்புத் தொகை போன்ற மாணவர்களுக்கு திரும்ப வழங்கப்படும் கட்டணங்கள் இதில் அடங்காது. இவை தவிர மாணவர் செலுத்தும் செமஸ்டர் தேர்வு கட்டடணங்கள் மாணவர்களுக்கு திரும்ப வழங்கப்படும்.

IV) அரசு கல்லூரிகள் மற்றும் தனியார் சுயநிதி கல்லூரிகளில் மாணவர்களிடம் வசூலிக்கப்படும் உணவு மற்றும் விடுதிக் கட்டணங்கள் (திருப்பித் தரும் வைப்புத் தொகை நீங்கலாக) மாணவர்களுக்கு மூன்று மாத காலத்திற்கு ஒரு முறை முன்பணமாக வழங்கப்படும்.

V) கல்லூரி விடுதியில் சேர்ந்து படிக்கும் மாணவர்களுக்கு விடுதி மற்றும் உணவுக் கட்டணங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மேற்படி கல்வி நிலையத்தின் முதல்வருக்கு முன்பணமாக காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். அடுத்த மூன்று மாதங்களுக்கான விடுதி / உணவுக் கட்டணத்தை முன்பணமாக அனுப்பும்பொழுது, முந்தைய மூன்று மாதங்களில் மாணவர் கல்லூரி விடுதியில் தொடர்ந்து தங்கி இருந்தாரா, அல்லது விடுமுறையில் இருந்தாரா என்பதற்கு மேற்படி கல்லூரி விடுதிக் காப்பாளரின் சான்றிதழ் பெற்றபின் அனுப்பி வைக்கப்படும். விடுதியில் தங்கியிருக்காத காலங்களுக்கு உண்டான விடுதிக் கட்டணம் மற்றும் உணவுக் கட்டணம் அடுத்த முன்பணத்தில் கழித்துக் கொள்ளப்படும். மேலும் அரசிடம் ரூ.2.00 கோடி இணை மானியம் கோரும் நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை ஏற்று , அந்த ரூ.2.00 கோடியை கேளிக்கை வரி இழப்பீடு ஈட்டு நிதியத்திலிருந்து வழங்கியும் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திலிருந்து பிரித்து வழங்கப்படவுள்ள 2007–08 ஆம் ஆண்டிற்கான மாநில நிதிக்குழு மானியத்தின் இறுதித் தவணையிலிருந்து ரூ.2.53 கோடியை மேலே பத்தி–3ல் குறிப்பிட்டுள்ளவாறு மாநகராட்சி/ நகராட்சிகளின் சார்பாக பிடித்தம் செய்து " மாநகராட்சி/நகராட்சி பள்ளி மாணவர் கல்வி உதவி நிதி" (Corpus Fund)–க்கு உடனே மாற்றம் செய்திடவும், பின்னர் இத்தொகையை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தீர்மானத்தைப் பெற்று உள்ளாட்சி அமைப்புகளின் கல்வி நிதியிலிருந்து பொது நிதிக்கு மாற்றம் செய்திடவும் அனுமதித்து அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான கல்விச் செலவினங்கள் அதிகரிக்கும் பொழுது அதற்கேற்றவாறு கல்வி உதவித் தொகை பொது நிதியினை அதிகரித்துக் கொள்ளவும், கல்விநிதி மற்றும் அரசு மானியத் தொகையிலிருந்து கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் உள்ள "நகராட்சி / மாநகராட்சி பள்ளி மாணவர் கல்வி உதவித் தொகைத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளுக்கு" அரசு ஒப்புதலளிக்கிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன் மார்டி,
அரசு முதன்மைச் செயலர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5
உள்ளாட்சி நிதி கணக்கு தணிக்கை, சென்னை
தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர், டுபிட்கோ, சென்னை–35
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்,
அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள்,
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை –18.
உள்ளுறை தணிக்கை அலுவலர், மாநில கணக்காய்வுத் துறைத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலரின் தனிச் செயலர்,சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9.
நிதித் துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9.
நிதித் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.